
# 2. நீர்



மழையாக வருவேன் !
வெள்ளமாய்ப் பாய்வேன் !
குளமாகத் தேங்குவேன் !
ஏரியாக மாறுவேன் !
ஆறாக ஓடுவேன் !
கடலிலே கலப்பேன் !
மேகமாய் மாறுவேன் !
மீண்டும் மழையாக வருவேன் !

தாகம் தீர்ப்பேன் !
தீயை அணைப்பேன் !
சுத்தம் செய்வேன் !
மின்சக்தி கொடுப்பேன் !
பயிர்களை வளர்ப்பேன் !
நானின்றி உயிரினங்கள் இல்லை !
நான்தான் நீர் !

நான் உங்களோடு பேசுகிறேன்! என்னைப் பற்றித் தெரிந்து கொள்கிறீர்களா?

நீங்கள் வாழ நான் தேவை.
மழை பெய்யும்போது
நான் வருவேன்.





நிலப்பரப்பில் ஆழம் குறைந்த
பள்ளங்களில் தேங்கும் போது
நான் குளம்.





ஆழம் அதிகமான பரந்த
நிலப்பரப்பில் தேங்கும் போது
நான் ஏரி.





சிறு சிறு ஓடைகள்
ஒன்று சேரும்போது
நான் ஆறு.





ஆறுகளெல்லாம்
சென்று சேரும் இடத்தில்
நான் கடல்.



நீரின் ஆதாரம் மழையே !
குளம், ஏரி, ஆறு மற்றும் கடல் போன்றவைகளில் நீர் உள்ளது.


சங்கரும், சரிதாவும் எந்தெந்த நீர் நிலைகளில் மீன் பிடித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை எழுதுவோமா ?












இந்த நீர் நிலைகள் இயற்கையாக உருவானவையா ? செயற்கையாக உருவாக்கப்பட்டவையா ? எழுதுக.



## நீரின் பயன்களை எழுதுவோமா...!



சமையல் செய்ய...





துணி துவைக்க...





செடி வளர...





தீயை அணைக்க...



இவை தவிர, நீரானது வேறு எதற்கெல்லாம் பயன்படுகிறது ?
உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து கலந்துரையாடுங்களேன்.

**கீழே உள்ள செயல்களில் சரியான செயலை ☑ எனவும் தவறான செயலை ☒ எனவும் குறியிடுங்கள்.**

 ☐

 ☐

 ☐

 ☐

- குடிநீரைச் சுத்தமான பாத்திரங்களில் சேமிக்க வேண்டும்.
- குடிநீரை மூடிப் பாதுகாக்க வேண்டும்.
- குடிநீரைக் காய்ச்சி ஆறவைத்து வடிகட்டிக் குடிக்க வேண்டும்.
- குடிநீரை மாசு படுத்தக் கூடாது.
- குடிநீரை வீணாக்கக்கூடாது.
- ஒவ்வொரு நீர்த் துளியையும் நாம் சேமிக்க வேண்டும்.
- நீரைச் சேமிப்பது நமது கடமையாகும்.

மாசுபட்ட நீரில் நோய்க் கிருமிகள் உண்டாகும். மாசுபட்ட நீரைக் குடிப்பதால், நோய்கள் உண்டாகும். எனவே நீரை நாம் தூய்மையாகப் பாதுகாக்க வேண்டும்.

படத்தை உற்றுநோக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது சரி ? எது தவறு ? எனக் குறியிடவும்.



- தொழிற்சாலையிலிருந்து கழிவு நீர் வெளியேறுகிறது. ☐
- அணைக்கட்டிலிருந்து பாசனநீர் வெளியேறுகிறது. ☒
- இந்த நீரைக் குடிக்கலாம். ☐
- இந்தநீரில் குளிக்கக் கூடாது. ☐




- குழாயில் இருந்து சாயப்பட்டரைக் கழிவு வெளியேறுகிறது. ☑
- குழாயில் இருந்து தூய்மையான நீர் வெளியேறுகிறது. ☐
- இந்த நீரை துணி துவைக்க பயன்படுத்தலாம். ☐
- இந்த நீரில் பயிர் நன்றாக வளரும். ☐



- பிளாஸ்டிக் கழிவுகள் நீரில் கலந்துள்ளன. ☐
- கழிவுப்பொருட்களை நீரில் கலக்கக்கூடாது. ☐
- இந்த நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். ☐
- இந்த நீரை சமையலுக்குப் பயன்படுத்த முடியாது. ☐



தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணை. இங்கு நீர் மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது.



தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குற்றாலம் நீர்வீழ்ச்சி.

நீங்கள் பார்த்த நீர்வீழ்ச்சிகள்

______________________ ______________________

______________________ ______________________

**உங்களுக்குத் தெரியுமா ?**

பூமியின் பெரும்பகுதி நீலநிறமாகக் காட்சி அளிக்கிறது. அது ஏன் ?

